
**ஜூலை – 19**

# TNPSC துளிகள்

- சிக்கிம் மாநிலத்தின் பாக்யாங் மாவட்டத்தில் உள்ள யாக்டென், அந்தமாநிலத்தின் 'நாடோடி சிக்கிம்' முன்னெடுப்பின் கீழ் இந்தியாவின் முதல் எண்ணிம நாடோடி கிராமமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்திய இராணுவம் ஆனது, உத்தரப் பிரதேசத்தின் மீரட் நகரில் உள்ள கார்கா படை வீரர்கள் களப் பயிற்சிப் பகுதியில் 'பிரசாந்த் சக்தி' என்ற பெயரிலான ஒரு அதிக விளைவு அளிக்கும் செயல்பாட்டு விளக்கப் பயிற்சியினை நடத்தியது.
- புலம்பெயர்வு, நம்பிக்கை மற்றும் முஸ்லிம் பெண்களின் வாழ்க்கை குறித்த தமது படைப்புகளுக்காக சூடான்-ஸ்காட்லாந்தைச் சேர்ந்த எழுத்தாளரான லீலா அபுலேலா 2025 ஆம் ஆண்டிற்கான PEN Pinter பின்டர் பரிசை வென்றுள்ளார்.
- ஆஸ்திரேலியாவானது, இந்தியா உட்பட 19 நாடுகளுடன் இணைந்து இதுவரை இல்லாத அளவில் மிகப்பெரியதொரு கூட்டு இராணுவப் பயிற்சியான Talisman Sabre 2025 எனும் பயிற்சியினைத் தொடங்கியுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் படாவுனில் உள்ள மாநில அரசு மருத்துவக் கல்லூரியில் ஒரு புதிய பிரதான் மந்திரி திவ்யஷா கேந்திரா (PMDK) தொடங்கப்படவுள்ளது.
  - இது மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயதான பயனாளிகளுக்கு பரிசோதனை, ஆலோசனை, உதவி வழங்குதல் மற்றும் சிகிச்சைக்கு பிந்தைய ஆதரவு போன்ற ஒருங்கிணைந்த சேவைகளை வழங்குகிறது.
- மனித நாகரிகத்தில் குதிரைகளின் வரலாறு மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தைக் கொண்டாடும் வகையில், ஜூலை 11, 2025 அன்று உலக குதிரை தினம் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
  - இது மங்கோலிய அதிபர் குரேல்சுக் உக்னாவால் ஜூன் 3, 2025 அன்று உலகளவில் குதிரைகளைக் கௌரவிக்க முன்மொழியப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கல்வி மேம்பாட்டுத் தினம் 2025




- தமிழக அரசானது, K. காமராஜர் அவர்களின் பிறந்த நாளை (ஜூலை 15) 'கல்வி தினம்' அல்லது 'கல்வி மேம்பாட்டுத் தினம்' ஆக கொண்டாடுகிறது.
- 2006 ஆம் ஆண்டு முதல் இந்த நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

- காமராஜர் அவர்கள் 1903 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதியன்று சென்னை மாகாணத்தின் விருதுபட்டியில் குமாரசாமி மற்றும் சிவகாமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.
- அவர் 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 முதல் 1963 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதி வரை சென்னை முதல்வராகப் பணியாற்றினார்.

## நிமிர்ந்து நில் முன்னெடுப்பு

- தமிழகத்தின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் அமைச்சர் நிமிர்ந்து நில் என்ற முன்னேடுப்பினைத் தொடங்கி வைத்தார்.
- உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்காக என இளையோர்களிடையே புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவுத் திறனை வளர்ப்பதற்காக என இது தொடங்கப் படுகிறது.
- இந்த முன்னெடுப்பானது ஆண்டுதோறும் 2,000 உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 30.5 லட்சம் மாணவர்களுக்கு தொழில்முனைவு மற்றும் புத்தாக்கங்களில் பயிற்சி அளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.





# தேசியச் செய்திகள்

## பாரம்பரிய அறிவு சார் எண்ணிம நூலகம் (TKDL)

- உலக சுகாதார அமைப்பு (WHO) "பாரம்பரிய மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை வரைபடமாக்குதல்" (Mapping the Application of Artificial Intelligence in Traditional Medicine) என்ற தலைப்பில் ஒரு தொழில்நுட்ப சுருக்கத்தை வெளியிட்டுள்ளது.
- பாரம்பரிய அறிவு சார் எண்ணிம நூலகத்தினை (TKDL) அறிமுகப்படுத்திய முதல் நாடு இந்தியா என்று இந்த ஆவணம் அங்கீகரித்துள்ளது.
- பாரம்பரிய மருத்துவ அமைப்புகளுடன், மிக குறிப்பாக ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி (ஆயுஷ்) அமைச்சகத்துடன் செயற்கை நுண்ணறிவினை (AI) மிகவும் நன்கு ஒருங்கிணைப்பதில் இந்தியா முன்னிலை வகிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.




## 2030 ஆம் ஆண்டுக்குள் 70 சதவிகித தூய ஆற்றல்




- முழு நேர (Round-the-clock-RTC) தூய ஆற்றல் என்பது சூரிய ஒளி, காற்று மற்றும் மின்கல சேமிப்பு போன்ற கார்பன் உமிழ்வில்லா மூலங்களுடன் கூடிய மின் பயன்பாட்டைப் குறிக்கிறது.
- இந்த RTC வகை ஆற்றல் மூலம் இந்தியாவின் மின் பரிமாற்ற அமைப்பினைக் கொண்டு ஆண்டுதோறும் ₹9,000 கோடி ($1 பில்லியன்) வரை சேமிக்க முடியும்.
- இப்புதிய அறிக்கையானது இவ்வகை தூய ஆற்றல் 70% செயல்பட்டால் 2.4% அளவில் உமிழ்வைக் குறைக்க முடியும் என்பதைக் காட்டுகிறது என்பதோடு, இது வருடாந்திர செயல்பாட்டால் எட்டப்பட்ட 1% குறைப்பை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- 100% RTC செயல்பட்டால்/பொருத்தத்தால், உமிழ்வுக் குறைப்புகள் 7% வரையில் உயரக் கூடும்.
- 52 ஜிகாவாட் (GW) RTC தூய்மை மின்சாரத் திறனைப் பயன்படுத்துவதன் மூலம் 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் திட்டமிடப் பட்ட தேசிய தேவையில் 5% அளவைப் பூர்த்தி செய்ய முடியும்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் 500 GW புதைபடிவ எரிபொருள் அல்லாத மின்சாரத் திறன் கொண்ட இந்தியாவின் இலக்குடன் இணைந்தப் பெரும் செலவு குறைந்த, காலநிலை - திறன்மிகு மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் தீர்வாக RTC தூய மின்சாரம்

இருக்குமென இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

## இந்தியாவின் முதல் வானிலை வகையீடுகள்




- தேசியப் பண்டக மற்றும் வகையீட்டுப் பரிமாற்ற நிறுவனம் (NCDEX) ஆனது இந்தியாவின் முதல் வானிலை வகையீடுகளைத் தொடங்குவதற்கு இந்திய வானிலையியல் துறையுடன் (IMD) ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- சந்தை அடிப்படையிலான கருவிகளைப் பயன்படுத்தி பருவநிலை தொடர்பான சில அபாயங்களை நிர்வகிக்க உதவுவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- இந்த வானிலை வகையீடுகளானது IMD-ன் வரலாற்று மற்றும் நிகழ்நேர தரவுத் தொகுப்புகளிலிருந்து மழைப் பொழிவு மற்றும் இதர பிற வானிலைத் தரவுகளின் அடிப்படையில் இருக்கும்.
- இது காலநிலைக்கு மிகவும் ஏற்றவாறு கிராமப்புற பொருளாதாரத்தை உருவாக்கவும், வருமான ஏற்ற இறக்கத்தைக் குறைக்கவும் உதவுகிறது.


## ADEETIE திட்டம்

- மத்திய மின்துறை அமைச்சகம் ஆனது ₹1,000 கோடியில் தொழில்துறைகள் மற்றும் நிறுவனங்களில் ஆற்றல் திறன்மிகு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த உதவுதல் (ADEETIE) என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த நிகழ்வு ஹரியானாவின் பானிபட்டில் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) தூய்மையான மற்றும் ஆற்றல் திறன்மிகு தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதை ஆதரிக்கிறது.
- ADEETIE திட்டமானது ஆற்றல் திறன்மிகு வாரியத்தால் (BEE) செயல்படுத்தப்படுகிறது.
- இது நிதி மற்றும் பல்வேறு தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது என்பதோடு இதில் பின்வருவன அடங்கும்:
    - கடன்களுக்கான வட்டி மானியம்
    - முதலீட்டுத் தர ஆற்றல் தணிக்கைகள்
    - விரிவான திட்ட அறிக்கைகள் (DPRs) தயாரித்தல்
    - செயல்படுத்தலுக்குப் பிந்தைய கண்காணிப்பு மற்றும் சரிபார்ப்பு
- இந்தத் திட்டம் முதல் கட்டத்தில் சுமார் 60 MSME தொகுப்புகளையும், 14 ஆற்றல் மிகு

துறைகளை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.




## சிற்றுண்டி ஊட்டச்சத்துப் பிரச்சாரம்




- பிரபலமான சிற்றுண்டிகளின் ஊட்டச் சத்து உள்ளடக்கம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக இந்திய சுகாதார அமைச்சகமானது ஒரு தேசியப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- அதிகரித்து வரும் வாழ்க்கை முறை தொடர்பான நோய்களை எதிர்த்துப் போராட என, தினசரி இந்தியச் சிற்றுண்டி உணவுகளில் மறைக்கப்பட்ட சர்க்கரைகள், எண்ணெய்கள் மற்றும் மாறுபக்க கொழுப்புகளை வெளிப்படுத்துவதில் இந்த பெரும் முன்னெடுப்பு கவனம் செலுத்துகிறது.
- நாக்பூரில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகமானது (AIIMS) இதற்கென ஒரு மாதிரித் திட்டத்தைத் தொடங்கியது.
- சமோசாக்கள், பக்கோடாக்கள், தேநீர் மாசில்லுகள் /பிஸ்கட்கள் மற்றும் ஜிலேபிகள் போன்ற பிரபலமான இந்திய சிற்றுண்டிகள் அவற்றின் அதிக சர்க்கரை, எண்ணெய் மற்றும் மாறுபக்க - கொழுப்பு உள்ளடக்கத்திற்காகப் பிரபல மூலமாக உள்ளன.
- இந்தச் சிற்றுண்டி மூலப்பொருட்களானது உடல் பருமன், நீரிழிவு நோய், இதய நோய்,


பக்கவாதம் மற்றும் புற்றுநோயுடன் தொடர்புடையவையாக உள்ளன.

- லான்செட்டின் அறிக்கையின் படி, 2050 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் சுமார் 450 மில்லியன் மக்கள் அதிக எடை அல்லது பருமன் உள்ளவர்களாக இருக்கலாம் என்றும், சீனாவிற்குப் பிறகு உலகளவில் இரண்டாவது இடத்தில் இந்தியா இருக்கும் என்றும் எச்சரிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## வாஷ் முன்னேற்ற கண்காணிப்பு 2025

- உலக சுகாதார நிறுவனம் (WHO) மற்றும் ஐ.நா குழந்தைகள் நிதியம் (UNICEF) ஆகியவை 100+ நாடுகளை உள்ளடக்கிய 2025 ஆம் ஆண்டிற்கான வாஷ் (WASH - நீர், துப்புரவு மற்றும் சுகாதாரம்) கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டன.
- சுகாதார வசதிகளில் வாஷ், கழிவுகள் மற்றும் மின்சாரத்தை மேம்படுத்த சுமார் 17% நாடுகளில் மட்டுமே போதுமான நிதி உள்ளது.
- காலரா, வயிற்றுப்போக்கு, தொற்றுநோய் பாதிப்பு மற்றும் புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்கள் போன்ற தொற்றுக்களைக் குறைப்பதற்கு வேண்டி வாஷ் மிகவும் முக்கியமானது.
- நிலையான வளர்ச்சி இலக்குகள் 3 மற்றும் 6 உடன் இணைக்கப்பட்ட, WASH சார் அணுகலானது ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமையாகும்.
- தூய்மை இந்தியா திட்டம், ஜல் ஜீவன் திட்டம் மற்றும் நமாமி கங்கே போன்ற பெரும் முன்னெடுப்புகள் மூலம் மிகவும் வலுவான WASH முன்னேற்றத்திற்காக என இந்தியா அங்கீகரிக்கப் பட்டுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## 2.10 சதவிகித சில்லறைப் பணவீக்கம்


- நுகர்வோர் விலைக் குறியீட்டால் (CPI) அளவிடப்படும் இந்தியாவின் சில்லறைப் பண வீக்கம், 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 2.10% ஆகக் குறைந்துள்ளது, இது 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குப் பிறகு ஏற்பட்ட மிக குறைந்த அளவு ஆகும்.
- இது 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் 2.82% இலிருந்து தீவிர சரிவைக் குறிக்கிறது, இது

நேர்மறையான அடிப்படை விளைவுகள் மற்றும் முக்கிய உணவு வகைகளில் பண வீக்கத்தைக் குறைத்ததன் மூலம் ஏற்பட்டுள்ளது.

- நுகர்வோர் உணவு விலைக் குறியீடானது (CFPI) 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடச் செய்யும் போது 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஆண்டுக்கு ஆண்டு -1.06% (தற்காலிக மதிப்பு) வீழ்ச்சியைக் கண்டுள்ளது.
- கிராமப்புற CFPI அடிப்படையிலான உணவுப் பணவீக்கம் -0.92% (தற்காலிக மதிப்பு) ஆகவும், நகர்ப்புற உணவுப் பணவீக்கம் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் -1.22% (தற்காலிக மதிப்பு) ஆகவும் இருந்தது.




## 650 மில்லியன் தினசரி பரிவர்த்தனைகள்




- ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) ஆனது சுமார் 650 மில்லியனுக்கும் அதிகமான தினசரி பரிவர்த்தனைகளுடன் உலகின் மிகச் சிறந்த நிகழ்நேரக் கட்டண முறையாக மாறியுள்ளது.
- சுமார் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் விசா (Visa) செயல்பட்டாலும் 7 நாடுகளில் மட்டுமே செயல்பாட்டில் உள்ள UPI ஆனது விசாவின் சுமார் 639 மில்லியன் தினசரிப் பரிவர்த்தனைகளை விஞ்சியது.
- இங்கு இந்திய தேசியப் பண வழங்கீட்டுக் கழகம் (NPCI) உருவாக்கிய அலைபேசித் தளங்களுக்கான உடனடியாக வங்கிகளுக்கு இடையேயான பண வழங்கீட்டு முறை

என்பதாக UPI 2016 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது.

- UPI மாதந்தோறும் 18 பில்லியனுக்கும் அதிகமானப் பணப் பரிவர்த்தனைகளை செயல் படுத்துகிறது மற்றும் இந்தியாவின் மின்னணு சில்லறைக் கட்டணங்களில் ஆதிக்கம் செலுத்துகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## கர்ப்பக் கால வலிப்புத் தாக்கத்திற்கு முந்தைய சோதனைக்கான உயிரி உணர்வு கருவி




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சிக் குழுவானது, கர்ப்பிணிப் பெண்களில் கர்ப்பக் கால வலிப்பு தாக்கத்திற்கு முந்தைய ஒரு முக்கியச் சோதனைக்கான உயிரி உணர்வு கருவியினை உருவாக்கி வருகிறது.
- தற்போதுள்ள தொழில்நுட்பங்களுக்கு ஒரு பெரும் மாற்றாக ஒளியிழை உணர்வு கருவி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு நோயாளியின் படுக்கைக்கு மிக அருகிலேயே இந்தச் சோதனையை மேற்கொள்ளும் வகையில் இது உருவாக்கியுள்ளது.
- குறைந்த விலையிலான நோயறிதல் சோதனையானது புற்றுநோய் மற்றும் அல்சைமர் போன்ற பிற நோய்களைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் ஒரு திறனைக் கொண்டு உள்ளது.
- சிகிச்சை அளிக்கப்படா விட்டால் கர்ப்பக் கால வலிப்புத் தாக்கத்திற்கு வழிவகுக்கும் அதற்கு முந்தைய நிலையானது, கர்ப்ப காலத்தில் ஏற்படும் உயிருக்கு ஆபத்தான ஒரு நிலையாகும்.
- கர்ப்பக் கால வலிப்புத் தாக்கம்/எக்லாம்ப்சியா ஆனது கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் புதிதாகப் பிறந்த பச்சிளம் குழந்தைகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் ஆபத்துகளை ஏற்படுத்துகிறது.
- கர்ப்பக் கால வலிப்புத் தாக்கத்திற்கு முந்தைய ஒரு நிலையைக் கண்டறியவதற்கான தற்போதைய முறைகள் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளும் மற்றும் அதிகளவிலான உள்கட்டமைப்பு மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் தேவை.

## குவாண்டம் ஈர்ப்பு முடுக்க மாற்றமானி

- நாசா அறிவியலாளர்கள் குழுவானது, பூமியின் கீழ் சுற்றுப்பாதையில் உள்ள ஒரு செயற்கைக்கோளில் குவாண்டம் ஈர்ப்பு முடுக்க மாற்றமானியை (QGG) மிகவும் நன்கு பயன்படுத்துவதற்கு முன்மொழிந்துள்ளது.
- இது பூமியில் உள்ள சிறிய ஈர்ப்பு விசை மாறுபாடுகளைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கிரகத்தின் நிலத்தடி நிறைப் பரவலை துல்லியமாகக் கண்காணிக்கவும், பருவ நிலை ஆய்வுகளுக்கு உதவவும், தேசியப் பாதுகாப்பை மேம்படுத்தவும் வழி வகுக்கும்.
- இது ஒரு குறிப்பிட்ட தொலைவிற்கு ஈர்ப்பு முடுக்கத்தில் உள்ள மாறுபாட்டை அளவிடப் பயன்படுத்தப்படும் மிகவும் உணர்திறன் வாய்ந்த அறிவியல் கருவியாகும்.
- நியூட்டனின் இரண்டாவது விதியின் (F = ma) அடிப்படையில், ஈர்ப்பு விசை மற்றும் ஒரு குறிப்பிட்ட பகுதியின் நிறை பரவலில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும் முடுக்கம் மற்றும் ஈர்ப்பு விசையில் ஏற்படும் மாறுபாடுகளை இந்தக் கருவி கண்டறிகிறது.





## இரத்தம் உறையாமை நோய்க்கு மரபணு சிகிச்சை

- இந்திய அறிவியலாளர்கள் இரத்தம் உறையாமை நோய்க்கு புதிய மரபணு சிகிச்சை முறையை உருவாக்கியுள்ளனர்.
- ஹீமோபிலியா ஏ என்பது ஒரு தவறான மரபணுவின் விளைவாக ஏற்படும் ஓர் அரிய மரபணு பாதிப்பு நிலையாகும்.
- இது மிகவும் கடுமையான, தன்னிச்சையான மற்றும் ஆபத்தான இரத்தப் போக்குப் பாதிப்புகளைத் தூண்டுகிறது.
- தமிழ்நாட்டில் இதுவரை ஐந்து நோயாளில் மட்டுமே இந்த நிலை காணப்படுவதாகக் கண்டறியப் பட்டாலும், அவர்களில் யாரும் சராசரியாக 14 மாத காலப் பகுதியில் இரத்தப் போக்கு பாதிப்புகளைக் கொண்டிருக்கவில்லை.
- இரத்தம் உறையாமை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாராந்திர இரத்தப்போக்கு பாதிப்புகள் இருப்பது அசாதாரணமானது அல்ல, அதற்கு அடிக்கடி சிகிச்சை தேவைப் படுகிறது.
- இந்த சிகிச்சையில் உடலில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு மரபணு, அத்தகைய

இரத்தப்போக்கைத் தடுக்கக்கூடிய போதுமான ஒரு உறைதல் காரணியை உருவாக்க கற்றுக் கொடுக்கிறது.


- பாதிக்கப் பட்டவர்களில் உள்ள உறைதல் காரணியின் சதவீதத்தைப் பொறுத்து இரத்தம் உறையாமை பாதிப்பு சிறியதாகவோ அல்லது கடுமையானதாகவோ வகைப் படுத்தப் படும்.
- இந்த நிலையின் மிகவும் பொதுவான பதிப்பான ஹீமோபிலியா ஏ, காரணி VIII எனப் படும் இரத்த உறைதல் காரணி இல்லாததால் ஏற்படுகிறது.
- இரத்தம் உறையாமை பாதிப்பு ஓர் அரியக் கோளாறு என்றாலும், 40,000 முதல் 100,000 நோயாளிகளுடன் இந்தியாவில் உலகின் இரண்டாவது மிகவும் பெரிய நோயாளிகள் எண்ணிக்கை உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் வணிகப் பயன்பாட்டிற்காக என அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரோக்டேவியன் என்ற ஒரே ஒரு மரபணுச் சிகிச்சை மட்டுமே உள்ளது.





## BIEF விளைவைப் பயன்படுத்தி பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி

- மொஹாலியில் உள்ள நுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் (INST) ஆராய்ச்சியாளர்கள், வினையூக்கிகளின் மேற்பரப்புகளில் புரோட்டான் உறிஞ்சுதல் பற்றிய புதிய தகவல்களை வெளிக் கொணர்ந்துள்ளனர்.
- இது மிகவும் திறம் மிக்க பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கு வழி வகுக்கும்.
- காப்பர் டங்ஸ்டன் ஆக்சைடு ($CuWO_4$) மற்றும் காப்பர் ஆக்சைடு (CuO) ஆகியவற்றை இணைத்து, மேம்பட்ட ஹைட்ரஜன் பரிணாம வளர்ச்சிக்காக என உள்ளமைக்கப்பட்ட மின்சார புல (BIEF) விளைவைப் பயன்படுத்த ஒரு புதிய மாறுபட்ட அமைப்பு ஆனது உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த BIEF, ஹைட்ரஜன் பரிணாம எதிர்வினை (HER) செயல்திறனில் மிகவும் நேரடியாக தாக்கத்தினை ஏற்படுத்தி, புரோட்டான் உறிஞ்சுதல் மற்றும் வெளியேற்றலை மாற்றி அமைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- சூரிய ஒளி, காற்று அல்லது நீர் மின்சாரம் போன்ற சில புதுப்பிக்கத் தக்க எரிசக்தி

ஆதாரங்களைப் பயன்படுத்தி, எந்த பசுமை இல்ல வாயுக்களையும் வெளியிடாமல் நீரின் மின்னாற்பகுப்பு மூலம் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்யப் படுகிறது.




## மீக்கடத்துத் திறன் கொண்ட இணைவு காந்த அமைப்பு – ITER



3.4: The International thermonuclear Experimental Reactor (ITER) located in Caradache, France [3].

- தூய்மையான ஆற்றலுக்காக உருவாக்கப்படும் உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சக்தி வாய்ந்த சாதனம் ஆனது 2025 ஆம் ஆண்டில் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியது.
- சர்வதேச அதிவெப்ப அணுக்கரு இணைவுச் சோதனை உலை (ITER) திட்டம் தற்போது தெற்கு பிரான்சில் 180 ஹெக்டேர் தளத்தில் கட்டுமானத்தில் உள்ளது.
- இந்தியா உட்பட 30க்கும் மேற்பட்ட நாடுகள் உலகின் மிகப்பெரிய டோகாமாக் அணு உலையை உருவாக்க கூட்டு சேர்ந்துள்ளன.
- இது ஒரு பெரிய அளவிலான மற்றும் கார்பன் இல்லாத ஆற்றல் மூலமாக அணுக்கரு இணைவின் சாத்தியக் கூறுகளைச் செயல் விளக்குவதற்கான ஒரு காந்த இணைவு சாதனமாகும்.
- அணுக்கரு இணைவு ஆனது இரண்டு ஒளி கருக்களை இணைப்பதன் மூலம் ஆற்றலை உருவாக்குகிறது, இதனால் ஒரு கனமான கரு உருவாகிறது.

- அணுக்கரு இணைவு வினைகள் சூரியன் மற்றும் பிற நட்சத்திரங்களுக்கு ஆற்றல் அளிக்கின்றன.
- அணுக்கரு இணைவு என்பது ஒரு பாதுகாப்பான, கார்பன் இல்லாத மற்றும் நிலையான ஆற்றல் மூலமாக இருக்க முடியும் என்பதை நிரூபிப்பதே ITER உலைக் கட்டமைப்பயு திட்டத்தின் நோக்கமாகும்.
- இது 150 மில்லியன் டிகிரி செல்சியசிற்கும் அதிகமான வெப்பநிலையில் அணுக்கரு இணைவை நன்கு மேற்கொள்ள வேண்டி டியூட்டீரியம் மற்றும் ட்ரிடியம் (ஹைட்ரஜன் ஐசோடோப்புகள்) கூறுகளைப் பயன்படுத்துகிறது.
- வெறும் 50 மெகாவாட் உள்ளீட்டு வெப்ப ஆற்றலிலிருந்து 500 மெகாவாட் இணைவு சக்தியை (10 மடங்கு) உற்பத்தி செய்து, 10 என்ற அணுக்கரு இணைவு செயல் திறனை (Q) அடைவதே இதன் இலக்கு ஆகும்.


## பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரத்தின் இரண்டாவது குறுகிய காலச் செயல் திறன் சோதனை




- மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை வளாகத்தில் (IPRC) பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரத்தின் குறுகிய காலச் செயல் திறன் சோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இந்த சோதனையில், உண்மையான இயக்க சூழல்களின் கீழ் அதன் தீப்பற்றல் மற்றும் செயல்திறனைச் சரிபார்க்க வேண்டி உண்மையான எரிபொருளைப் பயன்படுத்தி இயந்திரத்தை குறுகிய காலத்திற்கு இயக்கும் செயல்முறை அடங்கும்.
- இந்தச் சோதனையானது உந்துதல் கலத்தினைத் தவிர மற்ற அனைத்து இயந்திர அமைப்புகளையும் உள்ளடக்கிய முக்கியக் கூறு சோதனை ஆகும்.
- உந்துதல் கலம் அந்து 3.5 வினாடிகள் காலத்திற்கு வேண்டி செயல் திறன் சோதனைக்கு உட்படுத்தப் பட்டது.
- இது இயந்திரத்தின் தொடக்க இயக்க நிலையை உறுதிப்படுத்தியது.
- சோதனையின் போது, இயந்திரம் வெற்றிகரமாகத் தீப்பற்றப்பட்டு அதன் மதிப்பிடப் பட்ட ஆற்றல் மட்டத்தில் 60% வரை இயக்கப்பட்டது என்பதோடு இது அதன் நிலையான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட செயல்திறனைக் காட்டுகிறது.

- பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரம் என்பது திரவ ஏவுகல இயந்திரம் ஆகும் என்பதோடு இது திரவ ஆக்ஸிஜனை (LOX) ஆக்ஸிஜனேற்றியாகவும், சுத்திகரிக்கப்பட்ட மண்ணெண்ணெயை (RP-1) எரிபொருளாகவும் பயன்படுத்துகிறது.
- எதிர்கால கனரக கலங்களை சுமந்து செல்லும் ஏவு வாகனங்களின் கூடுதல் உந்துதல் நிலைகளுக்கு ஆற்றல் அளிப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரத்தின் LOX-மண்ணெண்ணெய் கலவை மீக்குளிர் நிலையிலான அமைப்புகளை விட மிகவும் அதிகளவிலான உந்து விசையை வழங்குவதால், அது உந்துவிசை செயல்திறனை மேம்படுத்துகிறது.
- கூடுதலாக, மண்ணெண்ணெய் அந்து திரவ ஹைட்ரஜனை விட மலிவானது மற்றும் கையாள எளிதானது, செலவு குறைந்தது மற்றும் செயல்பாடுகளை எளிதாக்குகிறது.
- இது இஸ்ரோவின் கலன் உள்ளடக்கத் திறனை நன்கு அதிகரிக்கும் மற்றும் அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான ஏவு வாகனம் (NGLV) போன்ற எதிர்கால ஏவு வாகனங்களை ஆதரிக்கும்.

## சூரிய மேற்பரப்பிற்கு அருகிலான அதிக சுழற்சி வீதம் காணப்படும் பகுதி (NSSL)





- இந்திய வானியற்பியல் நிறுவனத்தின் (IIA) அறிவியல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட, சூரிய இயற்பியலாளர்களின் சர்வதேச குழுவானது, சூரியனின் மேற்பரப்பிற்கு அருகிலான அதிக சுழற்சி வீதம் காணப்படும் பகுதியில் (NSSL) மாறுநிலை பிளாஸ்மா பாய்வுகள் காணப் படுவதை கண்டறிந்துள்ளது.
- இது சூரியனின் 11 ஆண்டு கால காந்தச் செயல்பாட்டு (சூரியப் புள்ளி) சுழற்சியுடன் தொடர்புடைய வடிவங்களை வெளிப்படுத்துகிறது.
- பிளாஸ்மா பாய்வுகள் சூரியனின் காந்த இயக்கத்திற்கு ஏற்ப மாறுகின்றன, மேலும் அவை விண்வெளியின் வானிலை மற்றும் பூமியின் மீது தொலை தூரம் வரை பரவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.
- சூரியப் பொருட்களின் இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிக்க என்று அவர்கள் சூரியப் பரப்பு அலைப் பகுப்பாய்வு (helioseismology) என்ற ஒரு முறையைப் பயன்படுத்தினர்.
- இது சூரியனின் வழியாக பயணிக்கும் போது ஒலி அலைகளைக் கண்காணிக்கும் ஒரு மேம்பட்ட நுட்பமாகும்.
- சூரிய மேற்பரப்பிற்கு அருகிலான அதிகமான சுழற்சி வீதம் காணப்படும் பகுதி (NSSL) என்பது சூரியனின் புலப்படும் மேற்பரப்பிற்குக் கீழே அமைந்துள்ள ஒரு முக்கியமான பகுதியாகும் என்பதோடு இது சுமார் 35,000 கிமீ ஆழம் வரை நீண்டுள்ளது.

- NSSL பகுதியில், சூரியனின் கோண வேகம் (சுழற்சி வேகம்) ஆரத்தினூடே விரைவாகக் குறைகிறது என்பதோடு இது ஆழம், உயரம் மற்றும் சூரிய காந்த செயல்பாடுகளுடன் மாறுபடும் ஒரு சுழற்சி வீதத்தினை உருவாக்குகிறது.
- சூரியக் கரும்புள்ளிப் பகுதிகளை நோக்கி ஒன்றிணைக்கின்ற மேற்பரப்பு பிளாஸ்மா பாய்வுகள், NSSL பகுதியில் மையத்தில் தலைகீழாக மாறி வெளிப்புறமாகப் பாய்ந்து பெரிய சுழற்சி செல்களை உருவாக்குகின்றன என்பதை இந்த ஆய்வு மிகவும் நன்கு வெளிப்படுத்தியது.
- இந்தப் பாய்வுகள் சூரியனின் சுழற்சி மற்றும் கோரியோலிஸ் விசையால் மாற்றி அமைக்கப் படுகின்றன என்பதோடு இது பூமியின் புயல் உருவாக்கத்திலும் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அண்டார்டிகா பனி உருகுதல்




- அண்டார்டிகா கோடைகாலக் கடல் பனியானது தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளாக குறைந்து புதிய அளவினைப் பதிவு செய்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், டென்மன் பனிப்பாறை அருகே கடல் பனியில் 70% குறைந்துள்ளது பதிவாகியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அண்டார்டிகாவின் கடற்கரையில் 50%க்கும் அதிகமான பகுதிகள் வெளிப்பட்டன என்பதோடு இது அப்பனிப்பாறைகள் உருவாவதை இரட்டிப்பாக்கியது.
- எம்பேரர் பெங்குவின் அனைத்து இனக் குழுக்களும் இனப்பெருக்க வீழ்ச்சிகளை எதிர் கொண்டன என்பதோடு மேலும் நிலையான பனித் தளங்களைக் கண்டுபிடிக்க கடல் நாய்கள் / சீல்கள் போராடின.
- சுருங்கி வரும் கடல் பனி அளவானது அண்டார்டிகா தளங்களுக்களின் மீளுருவாக்கப்

பணிகளை சீர்குலைக்கிறது.

## மத்தியப் பிரதேசத்தில் காட்டுப் பூனை - கராகல்




- மத்தியப் பிரதேசத்தின் காந்தி சாகர் வனவிலங்குச் சரணாலயத்தில் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளில் முதல் முறையாக ஒரு அரிய வகை கராகல் என்ற காட்டுப் பூனை தென் பட்டது.
- கராகல்கள் ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு, மத்திய ஆசியா மற்றும் இந்தியாவின் சில பகுதிகளை பூர்வீகமாகக் கொண்ட நடுத்தர அளவிலான காட்டுப் பூனைகளாகும்.
- இரவில் வாழக் கூடிய, தனியாக வேட்டையாடும் இவை வறண்ட புதர்க் காடுகள், பகுதி அளவு வறண்ட மண்டலங்கள் மற்றும் ஈரப்பதமான வனப்பகுதிகளை விரும்புகின்றன.
- இந்த இனமானது இந்தியாவில் 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் அட்டவணை I என்பதின் கீழ் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் இனமாக பட்டியலிடப்பட்டு உள்ளது.

## மேற்குத் தொடர்ச்சி மலைகளில் புதிய தட்டாம்பூச்சி இனங்கள்





- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் லிரியோதெமிஸ் ஆபிரகாமி என்ற புதிய தட்டாம் பூச்சி இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- கேரளாவைச் சேர்ந்த பிரபல தாவரவியலாளர் ஆபிரகாம் சாமுவேலின் நினைவாக இந்த தட்டான்பூச்சிக்கு இப்பெயரிடப் பட்டது.
- இது தெற்கு மற்றும் மத்திய மேற்குத் தொடர்ச்சி மலைகளை அதன் இருப்பிடமாகக் கொண்டது மற்றும் தாழ்நில மழைக்காடுகள் மற்றும் நடுத்தர உயரப் பசுமையான மற்றும் இலையுதிர் காடுகளில் காணப்படுகிறது.
- இதன் கூடுதலாக தற்போது கேரளாவின் ஓடனேட் வகை (தட்டான்பூச்சிகள் மற்றும் ஊசித் தட்டான்கள்) இனங்களின் எண்ணிக்கையானது சுமார் 191 ஆக உயர்ந்துள்ளது என்பதோடு இவற்றில் 78 இனங்கள் இப்பகுதியில் மட்டுமே காணப்படுகின்றன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## மில்லியனர் இடம்பெயர்வு அறிக்கை 2025




- 2025 ஆம் ஆண்டிற்கான ஹென்லி தனிநபர் செல்வ வள இடம்பெயர்வு அறிக்கையில், இந்த ஆண்டு உலகளவில் சுமார் 142,000 மில்லியனர்கள் அல்லது அதிக நிகர மதிப்பு உள்ள தனிநபர்களின் (HNWIs) இடம்பெயர்வைப் பதிவு செய்துள்ளது.
- சுமார் 3,500 மில்லியனர்களின் நிகர வெளியேற்றத்துடன் இந்தியா உலகளவில் 57வது இடத்தில் உள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகம் (UAE) 9,800 மில்லியனர்களை ஈர்த்து இதில் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து அமெரிக்கா (7,500) மற்றும் இத்தாலி (3,600) உள்ளன.
- புலம்பெயர்ந்தோர், மீண்டும் வரும் குடிமக்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் காரணமாக 2,400 மில்லியனர்களைப் பெற்று சவுதி அரேபியா மிக வேகமாக வளர்ந்து வரும் இடமாக உள்ளது.
- 16,500 மில்லியன் டாலர் வெளியேற்றத்துடன் ஐக்கியப் பேரரசு முன்னணியில் உள்ளது, அதைத் தொடர்ந்து சீனா 7,800 மில்லியன் டாலர் வெளியேற்றத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- புலம்பெயர்வு இருந்த போதிலும், இந்தியாவின் மில்லியனர்களின் எண்ணிக்கை 2014

ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் 72% அதிகரித்துள்ளது என்பதோடு இது வலுவான உள்நாட்டுச் செல்வ வள உருவாக்கத்தைக் காட்டுகிறது.


# மாநிலச் செய்திகள்

## U-வடிவ வகுப்பறை - கேரளா

- கேரளப் பள்ளிகள் பாரம்பரியமான இறுதிவரிசை இருக்கை அமைப்புகளுக்குப் பதிலாக U-வடிவ அமைப்புகளாக மாற்றி உள்ளடக்கம் மற்றும் பங்கேற்பை ஊக்குவிக்கிறது.
- U-வடிவ அமைப்பு மாணவர்களை ஆசிரியரைச் சுற்றி அரை வட்டத்தில் வைக்கிறது என்பதோடு இது அனைவருக்கும் நேரடித் தெரிவு நிலையை உறுதி செய்கிறது.
- இந்த அமைப்பு வகுப்பறை படிநிலைகளைக் குறைக்கிறது மற்றும் பின் வரிசைகளில் பொதுவான கவனச் சிதறல்களைக் குறைக்கிறது.




## 2024–25 ஆம் ஆண்டில் பதப்படுத்தப்பட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி





- 2024–25 ஆம் ஆண்டில் பிரஞ்சுப் பொரியல் (French fries) மற்றும் வறுவல்/சிப்ஸுக்குப் பயன்படுத்தப்படும் பதப்படுத்தப்பட்ட உருளைக்கிழங்கின் இந்தியாவின் முன்னணி உற்பத்தியாளராக குஜராத் மாறியுள்ளது.

- பதப்படுத்தப்பட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியில் பனஸ்கந்தா மாவட்டம் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக குஜராத்தை முன்னிலை வகிக்க உதவுகிறது.
- இது 2024–25 ஆம் ஆண்டில் 61,000 ஹெக்டேருக்கு மேல் பரப்பளவினைக் கொண்டு 18.70 லட்சம் டன் உருளைக்கிழங்குகளை உற்பத்தி செய்கிறது.
- இது 2023–24 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 15.62 லட்சம் டன்களை விட அதிகம் ஆகும்.
- பனஸ்கந்தாவின் உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 30.65 டன் ஆகும் என்பதோடு இது பிரெஞ்சுப் பொரியல்களுக்குத் தேவையான தரம் கொண்ட உருளைக் கிழங்கிற்கான அதிகத் தேவையைப் பூர்த்தி செய்கிறது.
- சபர்கந்தாவானது 12.97 லட்சம் டன்கள் மற்றும் ஆரவல்லி 6.99 லட்சம் டன்கள் உருளைக் கிழங்குகளை உற்பத்தி செய்யும் பிற முக்கிய மாவட்டங்கள் ஆகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஃபௌஜா சிங்




- உலகின் மிக வயதான தொலைதூர ஓட்டப் பந்தய வீரராக கருதப்படும் ஃபௌஜா சிங் சமீபத்தில் காலமானார்.
- "டர்பனட் டொர்னாடோ" என்று செல்லப் பெயர் பெற்ற இவர் இந்தியாவில் பிறந்த பிரிட்டிஷ் நாட்டவராவார்.
- 2011 ஆம் ஆண்டில், அவரது 100வது வயதில், ஒரே நாளில் குறிப்பிட்ட வயது சார்ந்தப் பிரிவுகளில் எட்டு உலக சாதனைகளைப் படைத்தார்.
- இன சகிப்புத் தன்மையின் அடையாளமாக இருந்ததற்காக 2003 ஆம் ஆண்டில் தேசிய இனக் கூட்டணியால் அவருக்கு எல்லிஸ் தீவு பதக்கம் வழங்கப்பட்டது.
- இந்த பதக்கத்தினைப் பெற்ற முதல் அமெரிக்கரல்லாதவர் இவரே ஆவார்.
- ஃபௌஜா சிங்கிற்கு 2011 ஆம் ஆண்டில் இந்தியாவின் பெருமை என்ற ஒரு பட்டமும்

வழங்கப் பட்டது.

# முக்கிய தினங்கள்

## உலக மக்கள்தொகை தினம் 2025 - ஜூலை 11

- மக்கள்தொகை உயர்வு நிலையான ஒரு வளர்ச்சியைப் பாதிக்கிறது என்ற நிலையில் குடும்பக் கட்டுப்பாடு, பாலினச் சமத்துவம், மகப்பேறு சுகாதாரம், வறுமை மற்றும் மனித உரிமைகள் போன்ற சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த தினத்தின் நோக்கமாகும்.
- இது 1989 இல் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தால் (UNDP) நிறுவப்பட்டது.
- உலக மக்கள்தொகையானது ஐந்து பில்லியனை எட்டிய ஜூலை 11, 1987 அன்று "ஐந்து பில்லியன் தினம்" அனுசரிக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Empowering young people to create the families they want in a fair and hopeful world" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★